Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. STC . No. 584/2023

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –8

| | | | |
|---|---|---|---|
| Name: | காசி | Calling: | உதவி ஆய்வாளர், ஓய்வு |
| Father's Name: | சேட்டு | Religion: | |
| Village: | பேர்ணாம்பட்டு | Age: | 67 |
| Taluk: | குடியாத்தம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 30.07.2026 நேரம் : 12.28 PM

(எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 8 முதன்மை விசாரணை

நான் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 2017 ம் வருடம் வாணியம்பாடி நகர காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.04.2017 ம் தேதி, வாணியம்பாடி நகர காவல் நிலைய பொறுப்பு அலுவலில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ரவி என்பவர் இருந்த போது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற அடித்தடி இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த விஜயகுமார் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து, அதன் தன்மைக்கு ஏற்ப குற்ற எண் 154/2017 இதச 294(பி),323,506(1) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவயிடம் சென்று பார்வையிட்டு சாட்சிகளை விசாரித்து எதிரியை கைது செய்து, காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்று வைத்திருந்தார். அதனை நான் மேற்கட்ட புலன் விசாரணைக்கு

எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று பார்வையிட்டதில் ஏற்கனவே சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் தயாரித்திருந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் போலவே இருந்ததால் நான் தனியாக பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயாரிக்கவில்லை. அவர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்தபோது அவரிடம் கூறியது போலவே இருந்ததால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சம்பவம் நிகழ்ந்தது உண்மை என தெரியவந்ததால் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது இதச 294(பி),323,506(1) படிக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்துக்கொண்டேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் உள்ளது போல் தான் கூறினார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் போது அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் சொல்லாத சங்கதிகளை கொண்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் அ.சா.1 எத்தனை பேர் தன்னை மூன்று நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. அ.சா.1 யை எதிரித்தாக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி வாகனத்தை ஓட்டவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சி சொன்ன நபர்களிடம் மறுவாக்குமூலம் எதுவும் நான் பதிவு செய்யவில்லை என்றால் இல்லை. அ.சா.1 திருவிழாவில் ஏற்பட்ட முன்விரோதத்தின் காரணமாக எதிரியின் மீது கொடுத்த பொய் புகாரை பெற்று எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி அ.சா.1 யை அசிங்கமாக திட்டவில்லை என்றாலும் அடிக்கவில்லை என்றாலும், கொலை மிரட்டல் விடவில்லை என்றாலும் அவரின் மீது ஒரு பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் அ.சா.1க்கு உறவினர்கள் என்றால் சரிதான். வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் தயாரித்துக்கொண்டு எதிரியின் மீது ஒரு தவறான வழக்கு பதிவு செய்துள்ளார் என்றாலும் அதன் அடிப்படையில் நான் தவறான இறுதி அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் தவறான இறுதி

அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) காசி

SRIPATHI K

SRIPATHI K
2026.07.31
17:17:58
+0530